**உயிரியல்**

பகுதி II B கட்டுரை

01. (a) ஒளித்தொகுதி என்பது யாதெனச் சுருக்கமாக விளக்குக.

(b) ஒளியில் தங்கிய தாக்கங்களில் ஒளித்தொகுதிகளது வகிபாகத்தை விளக்குக.

02.(a) இருவித்திலை தாவரவேரின் முதலமைப்பினது குறுக்குவெட்டின் பெயரிடப்பட்ட கோட்டுப் படத்தினை வரைக.

(b) வேர்மயிரினால் அகத்துறிஞ்சப்படும் மண்கரைசல் வேரினது காழ்வரை கடத்தப்படும் செயற்பாட்டை விளக்குக.

03. (a) பின்னூட்டல் பொறிமுறை என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(b) மனிதரில் பிரசாரணச் சீராக்கம் ஒருசீர்த்திடநிலையில் பேணப்படும் விதத்தை விளக்குக.

04. இயுகரியோட்டாக் கலங்களில் பொலிபெப்ரைட்டுத் தொகுப்பின்போது DNA, RNA மற்றும் நொதியங்களின் பங்களிப்புக்களை விளக்குக.

05. (a) நன்னீர்ச் சூழல்தொகுதி மாசடையத்தக்க வழிகளையும் அதனால் உண்டாகும் பாதிப்புக்களையும் குறிப்பிடுக.

(b) நகர்ப்புற குடிநீர் சுத்திகரிப்பு தொகுதியினது நீர் பரிகரிப்பு நடவடிக்கைகளை சுருக்கமாக விபரிக்க.

06. பின்வருவன பற்றிச் சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(a) மனித மார்பென்பு

(b) தந்திரா உலக உயிரினக் கூட்டம்

(c) அலங்கார மீன்வளர்ப்பினால் உருவாகும் சுற்றாடல் பாதிப்புகள்